1970 மார்ச் 4]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இதற்கு இடமில்லை.

Mercury lamps along Mount Road

205 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. Minister for Local Administration be pleased to state—

(a) whether the entire Mount Road and upto the Parry's Corner would be lit up by powerful mercury vapour lamps; and

(b) if so, at what cost?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ரூ. 19.5 லட்சம் மதிப்பீட்டுச் செலவில் அமைக்கப்படும்.

THIRU K. VINAYAKAM : Whereas mercury vapour bulbs are found to be very satisfactory, will the Government take steps to light all the main streets in the City of Madras at the expense of the Government instead of depending upon the Corporation of Madras?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, சென்னை நகரின் எல்லையில் இருந்து மவுண்ட் சாலை, பூவிருந்தவல்லி நெடுஞ்சாலை, ஈவினிங் பஜார், நேதாஜி சுபாஷ்சந்திரபோஸ் நெடுஞ்சாலை ஆகிய சாலைகளின் வழியாகப் பாரி முனை வரை ரூ. 19.5 லட்சம் செலவில் தெருவிளக்கை, மேம்படுத்த செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்கள். ஏற்கெனவே ரூ. 13.5 லட்சம் தரப்பட்டு மர்மலாங் பாலத்தில் இருந்து மவுண்ட் சாலை மேம்படுத்தப் படுத்தப்பட்டுள்ளது. அதைப்பாரி முனை வரை நீட்டிக்க மேற்கொண்டு ரூ. 6 லட்சம் கேட்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி அரசு பரிசிலித்து வருகிறது.

புதுக்கோட்டையில் கூட்டுறவு பயிற்சிப் பள்ளி.

*206 வினா.—புலவர் பொ. பொன்னம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டையில் கூட்டுறவுத் துறைக்கான பணிகளைப் புரிவதற்குரிய பயிற்சிப் பள்ளியை அமைத்துத் தரும் கருத்து அரசுக்கு உண்டா ?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : கூட்டுறவு முறையின் வளர்ச்சி குறித்து மாவட்டந்தோறும் கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளியை அமைக்க வேண்டும் என்கிற அடிப்படையில் திருச்சி மாவட்டத்தில் புதுக்கோட்டையில் இனிமேலாவது அத்தகைய ஒரு பள்ளியை அமைக்க யோசிப்பார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர்: மாவட்டத்திற்கு ஒரு பயிற்சிப் பள்ளி என்கிற கொள்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இப்போது கோவை, சேலம், வேலூர், காஞ்சி; தஞ்சை; மதுரை; நெல்லை; ஆகிய 7 இடங்களில் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. சென்னையில் ஒரு பயிற்சிப் பள்ளியும், ஒரு கல்லூரியும் இருக்கின்றன. புதுக்கோட்டையைச் சேர்ந்தவர்கள், தஞ்சைப் பயிற்சிப் பள்ளியில் படிக்க வாய்ப்பு இருக்கிறது.

Lands owned by Srirangam Devasthanam

* 207 *Q*.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether Srirangam Temple Devasthanam in Tiruchirappalli owns about 67 acres of wet lands in Vengadathan Thuraiyur in Tiruchirappalli district;

(*b*) whether these lands are leased out to cultivating tenants in that village on agreement to measure out paddy yearly for temple use; and

(*c*) whether this year the aforesaid tenants gave paddy as per the lease agreement?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: (அ) ஆம்.

(இ) ஆம். இக்கோவிலின் பயனுக்காக 467 குவிண்டால், 91 கிலோ நெல் ஆண்டுக் குத்தகை ஏற்பாட்டின்கீழ் பயிரிடும் குத்தகைக்காரர்கள் 16 பேருக்கு மேற்சொன்ன நிலங்கள் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

(உ) இல்லை. குத்தகைக்காரர்கள் குத்தகையின் ஒரு பகுதியை மட்டுமே கொடுத்துள்ளனர்.

DR. H. V. HANDE: Sir, in view of the fact that several temples are suffering due to the non-supply of paddy in required quantities, will the Government take stringent steps to see that whatever paddy that is due to the temples is supplied properly and what are the concrete steps that the Government are going to take to ensure that the paddy is supplied to these temples regularly?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா: தலைவர் அவர்களே, அப்படிக் குத்தகை நெல் அளக்காமல் இருந்தால் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து நெல்லைப் பெறுவதற்கு அங்கே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மேலும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படியும் வசூலாகாமல் போனால் குத்தகைதாரர்களை வெளியேற்றுவதற்குச் சட்டம் இருக்கிறது. அதற்கும் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகையினாலே சட்டப்படி அதற்கு ஏற்பாடு இருக்கிற காரணத்தினாலே புதிதாக ஒன்றும் செய்வதற்குத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.